# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
# திருநெல்வேலி – 627 012

# All UG courses
## பகுதி – ஒன்று – பொதுத்தமிழ்

## முதலாம்  பருவத்திற்குரிய
## செய்யுள் பாடப் பகுதிகள்

முதற்பருவம் - இக்கால இலக்கியம்

Manonmaniam
Sundaranar University

## பல்கலைக்கழக வெளியீடு

2016-2017, 2018 ஆகிய ஆண்டுகளில் சேரும் மாணவர்க்குரியது

# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY
## TIRUNELVELI
### CHOICE BASED CREDIT SYSTEM
### PART – I POTHU TAMIL (பொதுத்தமிழ்)
### (With effect from the Academic Year 2017-2018)

**2017-2018 கல்வியாண்டு முதல் நடைமுறைக்கு வரவுள்ள பொது விருப்பப்பாடத் தேர்வுமுறை (பொதுத்தமிழ் அனைத்துத் துறைப் பாடப் பிரிவினருக்கும் உரியது)**

**பாடத்திட்டம்**

**பாடத்திட்டத்தின் நோக்கங்கள்**

1. பொது விருப்பப்பாடத் தேர்வு முறை (Choice Based Credit System) விதிகளை அடிப்படையாகக் கொண்டும், மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கிலும், எளிமையாகவும், ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் கற்பிக்கும் முறையில் இக்கால இலக்கியம் தொடங்கிச் சங்கால இலக்கியம் வரை பாடத்திட்டங்கள் நெறிப்படுத்தப்பட்டுள்ளன.
2. இலக்கணப்பயிற்சி, தமிழ்மொழியை எளிமைப்படுத்தும் முறையில், பிழையின்றி எழுதவும். பேசவும் பயிற்சி பெறும் விதமாக எழுத்து, சொல், பொருள், அணி என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
3. மாணவர்களின் நலன் கருதி இலக்கிய வரலாறு செய்யுள் அமைப்பிற்கேற்ப வகைப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இன்றைய தகவல் தொடர்பு சாதனங்களின் வழி தமிழ் வளர்ச்சியை அறிந்து கொள்ளும் நிலையைத் தூண்டுதல் செய்யும் நோக்கத்துடன் பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

**பாடத்திட்டக் காவலரையறை (அனைத்து பருவங்களுக்கும் உரியது)**

| பாடப்பகுப்பு | காலவரையறை |
|---|---|
| செய்யுள் | 2 மணி |
| இலக்கணம் | 1 மணி |
| உரைநடை | 1 மணி |
| சிறுகதை | 1 மணி |
| இலக்கிய வரலாறு | 1 மணி |

**MANONMANIAM SUNDARANAR UNIVERSITY**
**TIRUNELVELI**

UG COURSES – AFFILIATED COLLEGES
**Part - I Tamil**

(Choice Based Credit System)

(with effect from the academic year 2017-2018 onwards)

**MSU/2017-18/UG-Colleges/Part-I (Tamil) Semester-I/ppr.-1**

## பொதுத்தமிழ் - தாள் 1

அலகு 1 : செய்யுள்பகுதி

அலகு 2 : இலக்கணம்
இவ்விரு அலகுகளும் பல்கலைக்கழகத் தொகுப்பிலிருந்து கற்பிக்கப்படும்

அலகு 3 : உரைநடை
உரைநடைப்பூங்கா தொகுப்பாசிரியர் : முனைவர் இரா.காமராசு
அறிவுப்பதிப்பகம், (பி) லிட், சென்னை – 600014
விலை ரூ.60.00

அலகு 4 : சிறுகதை – கதைக்களஞ்சியம்
தொகுப்பாசிரியர் : முனைவர் சு.வேணுகோபால்
தாமரை பப்ளிகேஷன்ஸ் (பி) லிட், சென்னை – 600098
விலை ரூ.55.00

அலகு 5 : இலக்கிய வரலாறு

1. புதுக்கவிதை – தோற்றமும் வளர்ச்சியும்
2. சிறுகதை – தோற்றமும் வளர்ச்சியும்
3. புதினம் – தோற்றமும் வளர்ச்சியும்
4. நாடகம் – தோற்றமும் வளர்ச்சியும்
5. தகவல் தொடர்பு சாதனங்களும் தமிழ் வளர்ச்சியும்

பார்வை நூல்கள் :

இலக்கணம் - நன்னூல் மூலமும் உரையும்

இலக்கிய வரலாறு – தமிழ் இலக்கிய வரலாறு

1. முனைவர் பெ.சுயம்பு
   பாரதிப்பதிப்பகம், 113, இராஜீவ் தெரு, திசையன்விளை
   தமிழ் இலக்கிய வரலாறு
2. முனைவர் மு.அருணாச்சலம்
   அருண் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி

## முதற்பருவம் - இக்கால இலக்கியம்

## செய்யுள் பாடப்பகுதிகள்

## உள்ளடக்கம்


1. பரம்பொருள் வாழ்த்து -- பாரதியார்
2. நாட்டியல் நாட்டுவோம் -- பாரதிதாசன்
3. பெண்களின் உரிமைகள் -- கவிமணி
4. கைத்தொழில் -- நாமக்கல் வே.இராமலிங்கம்பிள்ளை
5. கனிச்சாறு -- பாவலரேறு பெருஞ்சித்திரனார்
6. ஒன்று எங்கள் ஜாதியே -- கண்ணதாசன்
7. தேசப்பிதாவுக்கு ஒரு தெருப்பாடகனின்அஞ்சலி -- மு. மேத்தா
8. அப்துல்கலாமின் வீணை -- சிற்பி
9. ஒரு காலத்தில் ஒரு குளம் இருந்தது -- வைரமுத்து
10. கங்கை இங்கே ஓட வேண்டும் -- நா. காமராசன்
11. வெற்றிமுகம் -- ஈரோடு தமிழன்பன்
12. கண்டும் காணாமல் -- கல்யாண்ஜி
13. புன்னகையின் வன்முறை -- தமிழச்சி தங்கபாண்டியன்
14. ஆசைப்படு -- பா.விஜய்
15. முறையா? -- உமா ஹரிஹரன்
16. ஹைக்கூ கவிதைகள்
17. நாட்டார் பாடல்கள்
    1. நாற்று நடவுப்பாடல்
    2. தாலாட்டு

## 1. பரம்பொருள் வாழ்த்து

ஆத்திசூடி யிளம்பிறை யணிந்து
மோனத் திருக்கு முழுவெண் மேனியான்
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை யெனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துண ராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறு மறிவாம்;
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்;
அதனருள் வாழ்த்தி அமரவாழ் வெய்துவோம். **- பாரதியார்.**

## 2. நாட்டியல் நாட்டுவோம்!

தென்பால் குமரி வடபால் இமயம்
கிழக்கிலும் மேற்கிலும் கடலாய்க் கிடந்த
பெருநிலத்தின் பெயரென்ன அத்தான்?
நாவலந் தீவென நவிலுவார் கண்ணே!

பழைய நம் தீவில் மொழி, இனம்பல உள.
மொழியினின்று கல்வி முளைத்தது
கல்வி இந்நாட்டில் கணக்காயர்களைக்
கலைஞரை, கவிஞரைத், தலைவரைப், புலவரை
விஞ்ஞானிகளை விளைத்தது – ஆயினும்
கற்றவர், கல்லாரிடத்தும் கல்வியைப்
பரப்ப முயலவில்லை பாழிருள்

விட்டு மீண்டவர் பிறரை மீட்கிலர்.
கற்றவர் சிலர், கல்லாதவர் பலர்,
என்னும் இழிவு நாட்டில் இருக்கலாம்
என்பது கற்றவர் எண்ணம் போலும்
எல்லாரும் இந்த நாட்டில் கற்றவர்
எனும் நிலை இயற்றுதல் கற்றவர் பொறுப்பே!

கல்வி இருட்டிற்குக் கலங்கரை விளக்கு,
யாவர்க்கும் வாக்குரிமை இருக்குமிந் நாட்டில்
யாவர்க்கும் கல்வி இருக்கவேண்டும்.
கண்ணிலார் எண்ணிலார் என்பது கண்டும்

கண்ணுளார் கண்ணிலார் போல இருப்பதா?
கல்லா வறியர்க்குக் கைப்பொருள் கல்வியே!
இல்லை என்பது கல்வி இல்லாமையே!
உடையவர் என்பவர் கல்வி உடையரே!

ஆட்சி வேலை அதிக மிருக்கையில்
நாட்டிற் கட்டாயக் கல்வி, நாளைக்கு
ஆகட்டும் என்பவர் மக்கள் இன்று
சாகட்டும் என்று சாற்றுகின் றவரே!
எந்நாளுமே நான் எண்ணுவது இதுதான்:
இந்த நாட்டில் யாவரும் படித்தவர்
என்னும் நன்னிலை ஏற்படுவ தெந்நாள்?

நாவலந் தீவில் மதங்கள் அனைத்தும்
இருக்கலாம் இன்னும் பெருக்கலாம் எனினும்
மதங்கள் வேறு மக்கள் வேறு
மதங்கள் மக்களின் மாற்றுச் சட்டைகள்
இந்நில மக்கள் அவ்வெழிற் சட்டையின்
உட்புறத் துள்ள மனிதரைக் காண்க.
அந்த மனிதர் இந்தப் பெருநிலம்
ஈன்ற பிள்ளைகள் என்னும் எண்ணம்
அறிந்து பயனிலை உணர்ந்தால் ஒற்றுமை
நிலைபெறும்; கலகம் அறவே நீங்கும்.
பன்மதம் சேர்ந்த பல்கோடி மக்களும்
நாங்கள் ஒன்றுபட்டோம் என்று நவின்றால்
மதங்களின் தலைவர் விரைந்து வந்து
பிரிந் திருங்கள் என்றா பிதற்றுவார்?
அவர்கள் அருள் உளம் கொண்டவர் அல்லரோ?

நாட்டியல் என்னும் நல்ல தங்கத்தேர்
நன்னிலை நண்ண வேண்டாமா? சொல்,
எல்லாரும் இந்நாட்டு மக்கள் என்றுணர்ந்தால்
செல்லரும் நிலைக்குச் செல்லல் இலேசு.

இனத்தைச் செய்தது மொழிதான், இனத்தின்
மனத்தைச் செய்தது மொழிதான், மனத்தை
மொழிப்பற்றின்று பிரிப்பது முயற்கொம்பு.

அன்னை மொழியையும் படி அதனோடு நான்
சொன்ன மொழியையும் படி எனும் சொற்கள்
கசக்குமே அலாது மக்கட்கு இனிக்குமோ?

இந்த நிலத்தில் அடிமை இல்லை
ஆதலால் துரைகளும் இல்லை அல்லவா?
கைக்குறிகாரர் கணக்கிலர் வாழும்
இந்த நிலையில் அயல்மொழி ஏற்றல்
எவ்வாறு இயலும்? அமைதி என்னாகும்?
நானிங்கு நவின்ற திருத்தம் வைத்துப்
பாரடி நாவலந் தீவின் பரப்பை நீ
பிரிந்த பகுதி பிணைந்தது பாரடி
பிரிய நினைத்தவர் பிழை உணர்கின்றனர்
பெருநிலத்தில் ஒரே கொடி பறந்தது!
நாவலந் தீவினர் எல்லாரும் நல்லவர்
எல்லாரும் வீரர் எல்லாரும் கவிஞர்
இமயச் சாரலில் ஒருவன் இருமினான்
குமரி வாழ்வான் மருந்து கொண் டோடினான்
ஒருவர்க்கு வந்தது அனைவர்க்கும் என்ற
மனப்பாங்கு வளர்ந்தது வேண்டிய மட்டும்!
அழகிய தாய்நிலம் அன்பில் துவைந்தே!

**- பாரதிதாசன்**

## 3. பெண்களின் உரிமைகள்

மங்கையராகப் பிறப்பதற்கே – நல்ல
மாதவஞ் செய்திட வேண்டும், அம்மா!
பங்கயக் கைந்நலம் பார்த்தலவோ - இந்தப்
பாரில் அறங்கள் வளரும், அம்மா!

அல்லும் பகலும் உழைப்பவர் ஆர்? - உள்ளத்து
அன்பு ததும்பி யெழுபவர் ஆர்?
கல்லும் கனியக் கசிந்துருகித் - தெய்வ
கற்பனை வேண்டித் தொழுபவர் ஆர்?

ஊக்கம் உடைந்தழும் ஏழைகளைக் காணில்
உள்ளம் உருகித் துடிப்பவர் ஆர்?
காக்கவே நோயாளி யண்டையிலே - இரு
கண்ணிமை கொட்டா திருப்பவர் ஆர்?

சிந்திய கண்ணீர் துடைப்பவர் ஆர்? – பயம்
சிந்தை யகன்றிடச் செய்பவர் ஆர்?
முந்து கவலை பறந்திடவே – ஒரு
முத்தம் அளிக்க வருபவர் ஆர்?

உள்ளந் தளர்வுறும் நேரத்திலே – உயிர்
ஊட்டும் உரைகள் உரைப்பவர் ஆர்?
அள்ளியெடுத்து மடியிருத்தி – மக்கள்
அன்பைப் பெருக்கி வளர்ப்பவர் ஆர்?

நீதி நெறிநில்லா வம்பருமே – நல்ல
நேர்வழி வந்திடச் செய்பவர் ஆர்?
ஓதிய மானம் இழந்தவரை – உயர்
உத்தமர் ஆக்க முயல்பவர் ஆர்?

ஆவி பிரியும்அவ் வேளையில் - பக்கத்து
அன்போ டகலா திருப்பவர் ஆர்?
பாவி யமனும் வருத்திடாமல் - ஈசன்
பாதம் நினைந்திடச் செய்பவர் ஆர்?

அன்பினுக் காகவே வாழ்பவர் ஆர்? – அன்பின்
ஆவியும் போக்கத் துணிபவர் ஆர்?
இன்ப உரைகள் தருபவர் ஆர்? – வீட்டை
இன்னகை யாலொளி செய்பவர் ஆர்?

மங்கைய ராகப் பிறந்ததனால் - மனம்
வாடித் தளர்ந்து வருந்துவதேன்?
தங்கு புவியில் வளர்ந்திடும் கற்பகத்
தாருவாய் நிற்பதும் நீர் அலவோ?

செம்மையிற் பெற்ற குணங்களெலாம் - நீங்கள்
செய்வினை யாலே திருத்துவீரேல்,
இம்மைக் கடன்கள் முடித்திடவே - முத்தி

எய்திச் சுகமா யிருப்பீரே. - **கவிமணி**

## 4. கைத்தொழில்

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்;
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்;
எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருந்திடல் உனக்கே சரியாமோ?

உழவும் தொழிலும் இல்லாமல்
உலகில் ஒன்றும் செல்லாது;
விழவும் கலையும் விருந்துகளும்
வேறுள இன்பமும் இருந்திடுமோ?

காட்டிலும் மேட்டிலும் களைப்போடு
கஷ்டப் படுவோர் உழைப்பின்றி
வீட்டினில் சாதம் வெந்திடுமோ?
வேறெதும் உணவைத் தந்திடுமோ?

நெசவுக் காரர்கள் நெய்யாமல்
நிலத்தவர் உடைக்கென் செய்வார்கள்?
குசவன் செய்திடும் பாண்டமன்றோ?
குடித்தனம் நடந்திட வேண்டுமென்றும்?

கொல்லரும் தச்சரும் கூடாமல்
கூடமும் மாடமும் வீடாமோ?
கல்லடி சிற்பியும் தச்சருமே
காரியம் பலவினுக் கச்சாணி.

சலவை சவரம் செய்தாலும்
சாக்கடை கழுவுதல் செய்தாலும்
உலகுக் கதனால் உபகாரம்
ஒன்றும் தெரியார் வெறும்பாரம்.

வேந்தர்கள் வரிப்பணம் வாங்குவதும்
வீரர்கள் வெற்றிகள் தாங்குவதும்
மாந்தர்கள் செய்யும் எத்தொழிலும்
மண்ணில் சிறப்பதும் கைத்தொழிலால்.

எந்திர வேலைகள் சிறந்திடவும்
ஏற்றவன் கைத்தொழில் தெரிந்தனவே;
மந்திரத் தால்எதும் வந்திடுமோ?
மனிதன் செய்ததே எந்திரமும்.

வேலையில் லாதவர் திண்டாட்டம்
விளைத்திடும் கலகக் கொண்டாட்டம்;
ஆலைகள் எந்திரச் சாலைகளால்
அதிகப் படுவதை அறிவோமே.

கைத்தொழில் காத்திடும் ஒருநாடே
கலகம் குறைந்துள திருநாடாம்;
எத்தனைக் கெத்தனை எந்திரமோ
அத்தனைக் கத்தனை தொந்தரவே.

கைத்தொழில் தம்மைக் காத்திடுவோம்;
கலகம் பற்பல தீர்த்திடுவோம்;
பொய்த்தொழில் யாவும் குறைந்திடவே
பூமியில் நாமே சிறந்திடுவோம்.

ஏழை செல்வன் என்றுவரும்
எல்லாப் பிணக்கும் நின்றுவிடும்;
வாழிய வாழிய கைத்தொழில்கள்!
வாழிய நித்திய சத்தியமும்! **-- நாமக்கல் கவிஞர்**

## 5. கனிச்சாறு

தமிழ் வாழ்க வென்பதிலும் தமிழ்வா ழாது :
தமிழ்ப் பெயரை வைப்பதிலும் தமிழ்வா ழாது !!
தமிழ் சிரிப்பைப் பெருஞ்சிரிப்பாய் அவிழ்த்துக் கொட்டும்

கொக்கரிப்புப் பேச்சாலும் தமிழ் வாழாது !
ஆர்த்தெழும் உள் உணர்வெலாம் குளி ருமாறே
இமிழ் கடல்சூழ் உலகமெலாம் விழாக்கொண் டாடி
ஏற்றமிகச் செய்வதிலும் தமிழ்வா ழாதே !

பட்டிமன்றம் வைப்பதினும் தமிழ்வா ழாது
பாட்டரங்கம் கேட்பதிலும் தமிழ்வா ழாது
எட்டி நின்றே இலக்கியத்தில் இரண்டோர் பாட்டை
எடுத்துரைத்துச் சுவைபடவே முழக்கி நாளும்,
தட்டி, சுவர், தொடர்வண்டி, உந்துவண்டி
தம்மிலெல்லாம் “தமிழ் தமிழ்” என்றெழுதி வைத்தே
முட்டிநின்று, தலையுடைத்து முழங்கி னாலும்
மூடர்களே, தமிழ்வாழப் போவதில்லை !

செந்தமிழ்செய் அறிஞர்களைப் புரத்தல் வேண்டும்
செப்பமொடு தூய தமிழ் வழங்கல் வேண்டும்:
முந்தைவர லாறறிந்து தெளிதல் வேண்டும்:
முக்கழக உண்மையினைத் தேர்தல் வேண்டும்;
வந்தவர்செய் தீங்குகளால் தமிழர்க் குற்ற
வரலாற்று வீழ்ச்சிகளை எடுத்துக் கூறி,
நொந்தவுளஞ் செழித்ததுபோல் புதிய வையம்
நோக்கிநடை யிடல்வேண்டும் ! தமிழ்தான் வாழும் !

தண்டமிழில் பிறமொழியைக் கலந்து பேசுந்
தரங்குறைந்த தமிழ் வழக்கை நீக்கல் வேண்டும்!
தொண்டரெலாந் தெருக்களிலே கடைகள் தோறும்
தொங்கு கின்ற பலகைகள் மாற்றச் சொல்லிக்
கண்டு நிகர் தமிழ்ப் பெயர்ப்பால் புதுக்கல் வேண்டும்!
கற்கின்ற சுவடிகளில் செய்தித் தாளில்
விண்டுரைக்கா அறிவியலில் கலையில் எல்லாம்
விதைத்திடுதல் வேண்டும் தமிழ்; வாழும் அன்றே! **--பாவலரேறுபெருஞ்சித்திரனார்.**

## 6. ஒன்று எங்கள் ஜாதியே

ஒன்று எங்கள் ஜாதியே
ஒன்று எங்கள் நீதியே
உழைக்கும் மக்கள் யாவரும்
ஒருவர் பெற்ற மக்களே
வெள்ளை மனிதன் வேர்வையும்
கருப்பு மனிதன் கண்ணீரும்
உப்பு நீரின் வடிவிலே

ஒன்று சேரும் கடலிலே

ஆதிமனிதன் கல்லையெடுத்து
வேட்டையாடினான்
அடுத்த மனிதன் காட்டையழித்து
நாட்டைக் காட்டினான்
மற்றும் ஒருவன் மண்ணிலிறங்கி
பொன்னைத் தோண்டினான்

நேற்று மனிதன் வானில் தனது
தேரை ஓட்டினான்
இன்று மனிதன் வெண்ணிலாவில்
இடத்தைத் தேடினான் - வரும்
நாளை மனிதன் ஏழு உலகை
ஆளப் போகிறான்.

மன்னராட்சி காத்து நின்றதெங்கள் கைகளே
மக்களாட்சி காணச் செய்ததெங்கள் நெஞ்சமே
எங்களாட்சி என்றும் ஆளும் இந்த மண்ணிலே!

கல்லில் வீடு கட்டித் தந்ததெங்கள் கைகளே
கருணை தீபம் ஏற்றி வைத்ததெங்கள் நெஞ்சமே
இல்லையென்பதில்லை நாங்கள் வாழும் நாட்டிலே! **---- கண்ணதாசன்**

**(பணக்காரக் குடும்பம்)**

## *7. தேசப்பிதாவுக்கு ஒரு தெருப் பாடகனின் அஞ்சலி*

உன்னுடைய படங்கள்
ஊர்வலம் போகின்றன
நீ ஏன் தலை குனிந்தபடி
நடுத்தெருவில்
நிற்கிறாய்?

எங்கள் தேசப்பிதாவே!
அமைதி கொலுவிருக்கும்
உன் சிலைகளைப்
பார்க்கும் போதெல்லாம்
நான்
அழுது விடுகிறேன்!

தேசப் படத்திலுள்ள
கோடுகள்-
விடுதலைக்குப் போராடிய
வீரத் தியாகிகளின்
விலா எலும்புக் கூடுகள்!

கண்ணீர்க் கடலில்
கலங்கள் மூழ்கிய பிறகு
அடைக்கலம் தேடிய
ஆபுத்திரனே!

அமுதசுரபியைத்தான்
நீ தந்து சென்றாய்
இப்போது
எங்கள் கைகளில் இருப்பதோ
பிச்சைப் பாத்திரம்!

இந்த
மாற்றத்தை நிகழ்த்திய
மந்திரவாதிகள் யார்?

நிழலுக்குள் மறைந்திருக்கும்
நிழலை
யார் அம்பலப்படுத்துவது?

சரித்திர மாளிகையில்
அஹிம்சைப் பேரொளியில்
பகத்சிங்குகள்
மறைக்கப்பட்டதால் தானா
சுதந்திர மாளிகையை
எலிகள்
சுரண்டுகின்றன?
மயிலுக்குப் போர்வை தந்தவனின்
மரபிலே வந்தவர்கள்
எங்கள் மேனியில் கிடக்கும்
கந்தல் சட்டையையும்
கழற்றிக் கொண்டு போகிறார்கள்!

ஆடுகளை

உனக்காக வளர்த்தோம்
நாளடைவில் நாங்களே
மந்தை ஆடுகளாய்
மாறிப் போனோம்!

எங்கள்
வயிற்றைப் புறக்கணித்து விட்டுக்
காம்புகளை நேசிக்கிறார்கள்...

எங்களுக்குத்
தீவனம் கிடைக்காவிட்டாலும்
மேய்ப்பவர்களுக்கு மட்டும்
எப்படியோ
இனாம் கிடைத்துவிடுகிறது..

சட்டக் கட்டிடங்களில்
ஓட்டைகள் விழுந்துவிட்டன
வயதாகிப் போனதால்
தர்ம ஸ்தூபிகள்
தள்ளாடுகின்றன.
எங்கள் வாழ்க்கை
இருட்டோடு
இல்லறம் நடத்துகிறது!

பாவத்தைத்
தனித்தனியே செய்துவிட்டு
மொத்தமாகத் தீர்த்துக் கொள்ளப்
போதுமான அளவு
புண்ணிய ஸ்தலங்கள் இருப்பதால்

எங்கள்
பாரத புத்திரர்கள்
தூசு படாமல்
தூய்மையாகவே இருக்கிறார்கள்!

ராஜதானியில்
மலர்க் கீரிடங்கள்
சூட்டப்படுகிறபோது
சேரிக் குழந்தைகளின்
சின்ன விழிச்செடியில்
உப்பு மலர்கள்

உதிர்ந்து விழுகின்றன...

நீ கண்டுபிடித்த
சுதேசி ஆயுதமாம்
கைராட்டையைச் சுற்றிய சிலர்
தற்போது
தங்க நூல் நூற்கிறார்களாம்...
எங்களுக்கோ
வெள்ளியும் தங்கமும்
விழாக்களின் பெயரில்தான்
வருகின்றன!

ஒரே ஒரு விஷயத்தில் மட்டும்
இந்த நாட்டு மக்கள்
உன்னை
அப்படியே பின்பற்றுகிறார்கள்..
அரைகுறையாகத்தான்
உடுத்துகிறார்கள்!

தேசம் போகிற
போக்கைப் பார்த்தால்
பிறந்தநாள் உடையே
எங்கள்
தேசிய உடையாகிவிடும் போல்
தெரிகிறது.

எங்கள் தலைவர்கள்
வறுமையை எப்படியாவது
வெளியேற்றிவிட
வேண்டுமென்று தான்
மேடையில் மைக்கின் முன்னால்
பேச்சுத் தவம் செய்கிறார்கள்!

இருபத்தைந்தாண்டுகளில்
தேசத்தில்
மாற்றமே நிகழவில்லை என்று
யார் சொன்னது?

அணைக்கட்டுகளில்
திறக்கப்படும் தண்ணீர்

பள்ளங்களை ஏமாற்றிவிட்டு
மேட்டை நோக்கியே
பாய்கிறது.

சேரிகளில் மட்டுமே நீ
யாத்திரை செய்வாய்
என்பதைத்
தெரிந்து கொண்டதால்
உன்னை நேசித்தவர்கள்
தேசத்தையே
சேரியாக மாற்றிவிட்டார்கள்!

இந்த
மாற்றங்களை நிகழ்த்திய
மந்திரவாதிகளின்
கழுத்துக்கு
நாங்கள்
மாலை சூட்டுகிறோம்! ***-மு. மேத்தா (கண்ணீர்ப்பூக்கள்)***

## 8. கங்கை இங்கே ஓடவேண்டும்

பொன் குடத்திலே வருகின்ற
கங்கையே!
தாய்க் குலத்தின் மண்குடத்திலே
என்று நீ வருவாய்?
இமயமலையில் உட்கார்ந்திருப்பதை விட
ஈரவயல்களில் ஓடுவதைத்தான்
நான் ரசிக்கிறேன்!
நீ
சிவன் தலைமுடியில் இருப்பதைவிட
சிறு விவசாயியின் காலடியில்
ஓடுவதுதான் எனக்குப் பிடிக்கிறது! **-- நா. காமராசன்**
**(அவனுடைய காலடியில் ஒரு ஜீவநதி)**

## 9. அப்துல் கலாமின் வீணை

வெள்ளிப் புருவங்களின் கீழ்
இராமேசுவரக் கடலாய்த் தேங்கும்
ஆழ்ந்த வெளிர்நீலக் கண்கள்
எங்கோ லயித்திருக்க

புல்வெளி மான்கள்போல்
வீணைக் கம்பிகள் மேல்
துள்ளித் திரிகின்றன
அப்துல் கலாமின் விரல்கள்.

விம்மி இழைகிறது வீணை
வெடிக்கிறது காற்று
நடுநடுங்குகிறது வானம்
பொக்ரான் நெஞ்சில் ஒரு
பூகம்பம் பூக்கிறது
பூமியின் அடியில் ஒரு
சூரியப் பிரவாகம்
வீணையின் சுருதி
மேலே மேலே ஏறஏற
உணர்ச்சிப் பாதரசம்
எகிறிக் குதிக்கிறது
திசைகளின் விளிம்புகளில்.

மின்னல் கிழித்த விசும்பிலிருந்து
வெள்ளை ரோஜாக்கள் உதிர்கின்றன
மழை சின்னப் பிள்ளை போல்
ஆனந்தக் கூச்சலிடுகிறது....

***'ஞாலம் கருதினும் கைகூடும் காலம்***
***கருதி இடத்தால் செயின்''***
அறையினுள் செல்லக் குழந்தையாய்த்
தூங்குகிறது வீணை
திருக்குறள் சுவடி போல
தொலைதூர நட்சத்திரங்களில்

மோதித் திரும்பும் அவர் பார்வையில்
ஒரு சிணுங்கல்.

இதயச் சுவர்களில்
வேதனைச் சிலுவைகள்
ஆடி அசைகின்றன
கொதிக்கிற எண்ணெய்க்
கொப்பரையில் விழுந்ததெனத்
தவிக்கிறது மனம்.

நேற்று
எஸ்.எல்.வி. மூன்று ஏவுகலம்
மாயக் கோபுரமாய் உயர்ந்து
மொக்கு முறிந்தது போல்
வங்கக் கடலில்
ஏமாற்றமாய் உதிர்ந்தது….
மெல்லிய காற்று வந்து
வீணை நரம்புகளை வருட
சுவடி திறக்கிறது
வைரத் திவலை ஒன்று
அவர் விழிக்கு
ஒளி ஒத்தடம் கொடுக்கிறது….

***"இடுக்கண் வருங்கால் நகுக"….***

கருத்த நெற்றியில்
பின்னிய கவலைச் சிக்கல்கள்
அவிழ்கின்றன
மற்றொரு வைர மினுங்கல்
பளிச்சிடுகிறது….

***"சிதைவிடத்து ஒல்கார் உரவோர்***
***புதையம்பில்***
***பட்டுப் பாடூன்றும் களிறு"***

அப்துல் கலாமுக்குள்

ஆயிரம் யானைகளின் பிளிறல்
வீதி வீதியாய்
விலாசம் தேடி நாளிதழ் விற்ற
மசூதித் தெருச் சிறுவனுக்கு
வானம் வசப்பட்டுவிட்டது
இப்போது.

ஈர மணலில்
சங்குகள் பொறுக்கிக்
கிறுக்கித் திரிந்தவன்
இப்போது
வானக் கரும்பலகையில்
பிருதிவி, ஆகாஷ்,
அக்கினி, திரிசூலம்,
நாகம் எனக்
கோலம் வரைந்து
குதூகலிக்கிறான்.

அலை நகரில் பிறந்து
பாரத ரத்தினமாய்த்
தலைநகரில் சுடர் வீசும்
இந்தப் பச்சைத் தமிழருக்கு
கலைந்த தலையும்
கசங்கிய உடையும் அடையாளம்;
ஆயினும்
இவரது நெருப்புச் சிறகுகளே
இந்திய நாட்டுக்கு இரும்புக் கவசம்

அற்புதம்
எப்படி நிகழ்ந்தது?
நம்பிக்கைக் கோடுகளாய்
நீளும் அந்த வீணைக்கம்பிகள்
மெல்லென அதிர்கின்றன
கலாமின் விரல்களில்....
***"வெள்ளத்தனைய***
***மலர்நீட்டம்***
***மாந்தர் தம்***

***உள்ளத் தனையது***

***உயர்வு…."*** **கவிஞர். சிற்பி.**(பெருமூச்சுகளின் பள்ளத்தாக்கு)

## 10. ஒரு காலத்தில் ஒரு குளம் இருந்தது

தண்ணி பெருத்தகொளம்
தாமரப்பூப் பூத்தகொளம்
ஊருக்குத் தெம்பக்கம்
ஒருக்கழிச்சுப் படுத்தகொளம்

உள்காட்டு மூலையில
ஊர்பெறந்த வேளையில
கர்ண மகராசா
கரையெடுத்து வச்சகொளம்

மழையோட நீர்வாங்கி
மண்ணோட நெறம் வாங்கிச்
செந்தண்ணியானாலும்
சீனித்தண்ணி யான கொளம்

சாலி மரமிரண்டு
தண்ணியெல்லாம் நெழல் பரப்பிக்
கரையோரம் குடைபுடிச்சுக்
காவலுக்கு நின்ன கொளம்

காடுகரை போனவர்க்கும்
காக்கா குருவிகட்கும்
ஆடுமாடு அத்தனைக்கும்
அனுசரணையான கொளம்

ஐப்பசி கார்த்திகையில்
அடைமழைய உள்வாங்கி
நெறமாதப் பொம்பளையா
நெறபெருக்கா நின்னகொளம்

வாழ்ந்துகெட்ட சீமாட்டி
வளவிமட்டும் போட்டது போல்
கோடையிலும் குடிதண்ணி
கொஞ்சூண்டு வச்சகொளம்

பொசுக்குன்னு துணிமாத்தி
விசுக்குன்னு கரையேற
ஆம்பளையப் பொம்பளைய
அரைகொறையாப் பாத்தகொளம்

தவக்கா சத்தமிட
சரஞ்சரமாக் கொக்குவர
சொட்டவாள மீன்தவ்வச்
சுறுசுறுப்பா இருந்தகொளம்

சித்திரையில் சிலுசிலுக்க
மார்கழியில் கதகதக்க
மாயமோ மந்திரமோ
மந்திரிச்சு விட்டகொளம்

தாகமின்னு வந்தாலும்
தற்கொலைக்கு வந்தாலும்
வாங்கமக்கா வாங்கமக்கா
வாய்நெறயச் சொன்னகொளம்

மாரோட பிள்ளகட்டி
வயிறோட கல்லுக்கட்டி
செவனம்மா பொணமாகச்
செத்து மெதந்தகொளம்
மனுசப் பயகூடி
மண்ண ஏமாத்த
மழையெல்லாம் கூடி
மனுசன ஏமாத்த

இன்னைக்குத் தேதிக்கு
இல்லேன்னு போனகொளம்
என்னைக்கு நெனச்சாலும்
எங்கண்ணில் உப்புக்கொளம்

- **வைரமுத்து** (கொஞ்சம் தேநீர் நிறைய வானம்)

## 11. வெற்றி முகம்

முதல் படியில்

கால் வைத்தேன்; காத்திருந்தவைபோல்
கைகொடுத்து அழைத்துச் செல்ல
என்னை நோக்கிக்
குனிந்தன உயரங்கள்.

காலைக் கதிரவன்,
“மறந்துவிடாதே! இருள் உன் இதயத்தை
நெருங்காதிருக்க உத்தரவாதம் நான்” என்றான்

“இறங்கிவிடாதே!”
என்று சொன்னதோடு அடுத்தடுத்த
படிகள்
பட்டியலிட்டன தம் கைவசமுள்ள
பயன்களை.

“வெற்றியின்
ஒரு துணுக்கிலேயே எவ்வளவு சுவை பார்!”
காற்று
என் காதோரம் கொஞ்சியது.

“ஒரு படிக்கு
நூறு நட்சத்திரங்கள் வீதம் கணக்கு வைத்துப்
பரிசளிக்கக்
காத்திருக்கிறேன்” என்றது வானம்.

அலைகளை அழைத்து
என் நம்பிக்கைகளுக்குப்
புதிய மெட்டுகள் போடுமாறு
கட்டளையிட்டது கடல்.

உன்னைத்
தொட நினைக்கும் தோல்விகளைக்
குழிதோண்டி நான் புதைப்பேன்
மேலே நட!
மண்ணின்
மரகத நாக்குகளில்
ஈர உச்சரிப்புகள் எனக்கென.

முதல் படியிலேயே
இடறிவிட முயன்ற தயக்கங்கள், சபலங்கள்
முகவரி தப்பாய்ப் போனதாக
முணுமுணுத்தன.

என் நாள்களை
எப்படிச் செதுக்க வேண்டுமெனக்
காலம் யோசனை கேட்க,
அதை நான் பார்த்துக் கொள்வேன்
என்று என் கால்களை
எடுத்து வைத்தேன்
இரண்டாவது படியில் ---- **ஈரோடு தமிழன்பன்**(பனி பெய்யும் பகல்)

## 12. கண்டும் காணாமல்

காணாமல் போய்விட்டார்கள்
கல் உப்புவிற்கிறவர்கள்
கோலப்பொடிக்காரர்கள்
பிச்சி அரும்பு எனக் கூவி
பின் கருக்கலில் வருகிறவர்கள்,
ஈயம் பூசுகிறவர்கள்
எவர்சில்வர் பாத்திரக்காரர்கள்
மத்தியானத்தில் பசித்த பாம்புடன்
மகுடி ஊதி வருகிறவர்கள்
குங்குமம் வைத்துச் சட்டைபோட்ட
குட்டிக் குரங்காட்டிகள்
குடுகுடுப்பைக்காரர்கள்
பச்சைத் தலைப்பாகையுடன்
டேப் தட்டும் பக்கிரிகள்
வாசல்தேடி வந்து விற்கும்
வளையல் செட்டிகள்,
தெருத் திருப்பத்து வண்டிப் பேட்டையில்
மண்பானை விற்கும் வேளார்கள்
ஜவ்வுமிட்டாய்க் காரர்கள்
ஜரிகை இருக்கிறதா ஜரிகை எனக்
குரல் கொடுப்பவர்கள்
நாவல் பழம் விற்பவர்கள்
நார்ப்பெட்டியில் அவல் கொண்டுவருகிறவர்கள்
நாராயணசாமிக்கு அரிசி வாங்குகிறவர்கள்
அம்மி கொத்துகிறவர்கள்

அன்னக்காவடிச் சாமியார்கள்
காக்காய்க்குச் சோறு வைக்கக்
கத்திக் கூப்பிடுகிறவர்கள்….
அப்புறம்
காணாமல் போய்விட்டார்கள் எனக்
காணாமல் போய்விட்டவர்கள் பற்றி
இப்படிக் கவலைப்படுகிறவர்கள்
எல்லாம். --- **கல்யாண்ஜி** (மீனைப் போல இருக்கிற மீன்)

## 13. புன்னகையின் வன்முறை

எனக்கான பருத்தி உன்
தோட்டத்தில் பயிரிடப்படுகிறது.
அதற்கான நிலத்தையும், உரத்தையும்,
நீரோட்டத்தையும் நீயே
முடிவு செய்கிறாய்.

அறுவடை முடிந்து
ஆயத்த ஆடை ஆகும்வரை
அதனை அணிய,
இலகுவாக இருக்கிறதா
என்பதைவிட, எல்லாவற்றையும்
இழுத்து மூடுகிறதா என்பதிலே தான்
உன் கவனம் முழுவதும்.
கனமான கம்பளிகளை
என் கோடைகால பிறந்த நாட்களுக்குப்
பரிசளிப்பதில் தனிப்பட்ட
கவனம் செலுத்துகிறாய்.
பரிசளிப்பு கூட ஒரு வன்முறைதான்
என உன் புன்னகையைப் பார்த்து
புரிந்துகொண்டேன்.

எனக்கான ரொட்டியின் கோதுமையும்
உன் கைகளாலேயே
விதைக்கப்படுகிறது.
நுகர்வின் இன்பமாய்
இரவுகளில் உனக்கும்
நகரும் இயந்திரமாய்ப்
பகலில் பணிகட்குமாய்
என் பொழுதுகள்

பாத்தி கட்டப்பட்டு,
பகிரப்பட்டுவிட்டன அந்த
கோதுமை வயல்களிலேயே.

என் சேமநிதி, வைப்பு நிதி,
எல்லாவற்றையும் பசித்திருக்கும்
கழுகின் கூர்மையுடனும்,
ஆவேசத்துடனும்
கணக்கிலெடுக்கின்ற நீ
குழந்தை பெறுதலையும்,
கருத்தடையையும், தேநீருக்கான
சர்க்கரையின் அளவு போல
மிகச் சுலபமாய்த் தீர்மானிக்கிறாய் --- **தமிழச்சிதங்கபாண்டியன்** (மஞ்சணத்தி)

## 14. ஆசைப்படு

ஏ கனாக்காரனே!
சேமித்து வை
அவமானங்களை!
செலவு செய்
சோர்வுகளை!
திரும்பப் படி
தவறுகளை!

அருவியின் வீழ்ச்சி
நதியின் எழுச்சியாகிறது
விழித்திரு...
நீண்ட உறக்கம்
என்றுமே இறக்கம்!

உழைத்து உருகு,
உருகும் மேகமே மழை
உருகா மேகம் புகை.

நிழல் தேடாதே
உன் நிழலில் ஒரு
ஊரையே நிற்கவை.

முட்களில் மோதி
கிழியாதவனுக்குப்
பூக்களைத் தடவும்
தகுதி கிடையாது.

நீ அக்கினிக் குஞ்சு
என்ன செய்யும் உன்னை
இடர்கள் எனும்
இலவம் பஞ்சு?

துயரங்களைத்
தூக்கித் தூக்கி எறி!
அவநம்பிக்கை வாதிகளை
எதற்காகவும் அண்டாதே!
கொஞ்சமாய்ச் சிந்தி
நிறைய செயல் படு.

எதைக் கண்டும்
பிரம்மிக்காதே!
பிரம்மிப்பைப் போல் ஒரு
பின்னடைவே கிடையாது.

இது தான் வாழ்க்கை!
அலைகளைப் போல
அயராமல் முயற்சிசெய்!

தோல்வி என்பது
சிந்திக்கத் தெரியாதவனின்
சித்தாந்தம்.
நிலாவைத் தொட்டது
மூன்று தோல்விகளுக்குப்
பிறகுதான்.

உன்னை யாராலும்
தடுக்க முடியாது
ஆம்-
ஊதுபத்திகள் புகைந்து
ஊர் இருண்டு விடாது.

ஒருவன் கைதட்டி விட்டால்
போதும்

ஒன்பதாயிரம் பேர்
ஓடிவந்து சேர்ந்துகொள்வர்
இவ்வளவுதான் உலகம்.

நீ எழுந்தால்
ஒரு எட்டு வந்து பார்க்காதவன்
நீ விழுந்தால்
விழுந்து விழுந்து விசாரிப்பான்
கவனி!

பயிற்சி எடு!
அவமானங்களை
ஜீரணிக்க...

சதா யோசி!
மூளை ஒரு மிருகம்
தீனி போட்டுக்கொண்டே
இருக்க வேண்டும்
இல்லாவிட்டால் அது
தீயதைத் தின்றுவிடும்.

இளைஞனே!
இரைப்பையையும்
நம்பிக்கையையும்
காலியாக விடாதே!

வானம் கடல் காற்றுப் போல
அளவில்லாமல்
ஆசைப்படு.

**பா. விஜய்(நம்பிக்கையுடன்)**

## 15. முறையா?

மசாலா அரைத்தால் இன்னமும்
மசியவில்லை என்கிறீர்கள்?!
வீடு பெருக்கினால் குப்பையை
விட்டு விட்டதாகச் சொல்கிறீர்கள்!

நாத்தனார் சீப்பில் விட்டமுடியை
நான்தான் செய்ததாகச் சொல்கிறீர்கள்!

குக்கரில் அரிசி வேகாமல் போனாலும்
குற்றம் என்னவோ என் மீதுதான்!

என் பெயருக்கு வரும் தபால் கூட
சென்சார் செய்துதான் தருகிறீர்கள்!
என்வீட்டுக்காரர் வாங்கித்தரும் பூவைக்கூட
கேட்டுக் கொண்டுதான் வைக்க முடிகிறது!

இன்று நடப்பதெல்லாம் 'உங்கள் முறை'!
என்று வரும் 'என் முறை'- **உமாஹரிஹரன்**

## 16. ஹைகூ கவிதைகள

1. மானமற்ற நாய்கள்
மருகி மருகி ஊளையிடும்
வரதட்சணை நெஞ்சம். **- அமுதபாரதி (காற்றின் கைகள்)**

2. தலைக் கனம் இருப்பதால்
அடியோடு நாசம்
தீக்குச்சி. **- சி.விநாயகமூர்த்தி (புன்னகை மின்னல்)**

3. முளைக்கத் துடிக்கும் விதைகள்
மண்ணுக்குள்ளேயே சமாதியாக்கும்
பாலித்தீன் பைகள். **- மு. முருகேஷ் (நிலா முத்தம்)**

4. வல்லரசுகனவு
தகர்ந்து போனது பிச்சைகேட்கும்
சிறுவர்கள். - **பூபதி ராஜா (ராஜாங்கம்)**

5. குப்பைத் தொட்டியில்
நாய்களின் போராட்டம் இயலாமையுடன்
மனிதக் கூட்டம். **-பரிமளமுத்து (இலையுதிர் காலம் நிரந்தரமல்ல)**

6. உடைக்க முயல்கிறாள்
வறுமைக் கல்லை
கல்குவாரியில் அம்மா. -- **நந்தவனம்-சந்திரசேகரன் (நத்தைக் கூடுகள்)**

7. பூவின் மரணத்தில் காய்
மரணம் முடிவல்ல
தொடக்கம். -- **தேவகிமைந்தன் (உதிரிப்பூக்கள்)**

8. கல்லடிகளால் ரணம்
என்றாலும்
கனிகளுடன் மரம். -- **பல்லவன் (சின்ன நதிகள்)**

9. வேர்களிலுமா! பூக்கள்
மரத்தடியில்
மாணவிகள். **-- கே.ஜெகதீஷ் (சிந்தூரம்)**

10. புழுதிகிளம்பும்
காற்றே! அமைதியாய் இரு
பனியில் குளித்த பூக்கள். -- **துறவி (சிறகுகளின் சுவடுகள்)**

## 17. நாட்டார் பாடல்கள்

மனிதன் பேசத்தெரிந்தவன்;தன்னுடைய உணர்ச்சிகளையும் கருத்தையும் பிறருக்கு வெளிப்படுத்தத் தெரிந்தவன். சொல்லும் மொழியும் அவன் கருவிகளாகும். நாட்டுப்புறமக்கள் சில சொற்களால் ஆன பாடலை ஏதோ ஒரு வகையில் இசையோடு பாடினார்கள். அப்பாடல்கள் வாய்மொழியாக எங்கும் பரவின. தொல்காப்பியர் நாடோடிப்பாடல்களைப்'பண்ணத்தி' என்கிறார். நாடோடிப் பாடல்களுக்கென்று சில சிறப்பான இயல்புகள் உண்டு. உழைப்பில் ஈடுபடுவோர்கள் தம்மிடமுள்ள இயற்கையான ஆற்றலால் உணர்வு மேலிடப் பாடுவார்கள். எதுகையும், மோனையும் நாட்டுப்புறப்பாடல்களின் தனிச்சிறப்பு. விவசாய வேலைகளில் ஈடுபடும் பெண்களும், ஆண்களும் பாடும் பாடல்கள் பலவுண்டு. இப்பாடல்களில் தொழில்நுட்பம், உழைப்பால் ஏற்படும் உடல் சோர்வு, கண்காணியால் ஏற்படும் மனச்சோர்வு, குடும்ப வறுமை போன்ற கருத்துக்கள் குரவையாகவோ, கும்மியாகவோ, தெம்மாங்காகவோ தாலாட்டாகவோ வெளிப்படும்.

**1. நாற்று நடவுப் பாடல்:**

இப்பாடல்கள் நாற்று நடவரும் பெண்களின் தன்மை, கண்காணியின் கொடூரம், நடவின் நுட்பம், தொழில் ஈடுபாடு, குறைந்த கூலி, குடும்ப நிலை போன்றவற்றை

எடுத்தியம்புகின்றன. அப்பாடல்களில் தேர்ந்தெடுக்கப் பட்ட 'கண்ணிகள்' இங்கே தொகுக்கப்பட்டுள்ளன..

**2. தாலாட்டு :**

குழந்தையைத் தூங்க வைக்க தாயோ, பிறரோ பாடும் பாட்டு தாலாட்டு. தால் – நாக்கு. நாக்கினை நன்கு ஆட்டிப் பாடுவது தாலாட்டு எனலாம். தாலாட்டினை ஆங்கிலத்தில் (Lullelby) என்பர். தாலாட்டுக்குள்ளே பல்வேறு பொருளை வைத்துப் பாடுதல் அதன் சிறப்பு ஆகும். குழந்தையின் பிறப்பு - சிறப்பு, குழந்தையைத் தெய்வத்தோடும் – இயற்கையோடும் ஒப்பிடல், தந்தை –தாயின் மனநிலை, எதிர்பார்ப்பு, உறவுகளின் பாசமும்–பரிதவிப்பும் தாலாட்டில் இடம் பெறும். நீங்களும் இங்குத் தரப்பட்டுள்ள தாலாட்டினைக் கொஞ்சம் பாடிப் பாருங்களேன்.

## 1. நாற்று நடவுப் பாடல்

அரசமரத்துத் தெருவிலிருந்து – ஏலங்கிடி லேலோ
அம்பதுபேர் வாறாங்களாம் – ஏலங்கிடி லேலோ
அங்கேரெண்டு இங்கேரெண்டு – ஏலங்கிடி லேலோ
ஆடிப்பாடி வாறாங்களாம் – ஏலங்கிடி லேலோ
கொழுந்து வெற்றிலை போட்டுக்கிட்டு – ஏலங்கிடி லேலோ
குமரிப்பிள்ளை வாறாள்பாரு – ஏலங்கிடி லேலோ
கஞ்சி கலயங்கொண்டு – ஏலங்கிடி லேலோ
கருத்தாவாறாள் காளியம்மா – ஏலங்கிடி லேலோ
வாரியிலே வந்த தண்ணீர் – ஏலங்கிடி லேலோ
வயலுக்குள்ளெ பாயுதடி – ஏலங்கிடி லேலோ
சீலையெல்லாம் வரிஞ்சுக்கிட்டு – ஏலங்கிடி லேலோ
சேற்றுக்குள்ளே இறங்குறாங்க – ஏலங்கிடி லேலோ
நாற்றெல்லாம் பிடுங்கையிலே – ஏலங்கிடி லேலோ
நண்டுஞ்சேர்த்துப் பிடிக்கறாங்க – ஏலங்கிடி லேலோ
கட்டுச்சின்னக் கட்டுகளெல்லாம் – ஏலங்கிடி லேலோ
கணுக்காலிலே அடிப்பாங்களாம் – ஏலங்கிடி லேலோ
இடுப்பிடுலொரு கையும் வைத்து – ஏலங்கிடி லேலோ

அடுத்தவயல் போறாங்கடி – ஏலங்கிடி லேலோ
பாழும்பயல் வயிற்றுக்குத்தான் – ஏலங்கிடி லேலோ
பணம்ஒண்ணுதான் வேணுமையா – ஏலங்கிடி லேலோ
கால மழைக் காலத்திலே – ஏலங்கிடி லேலோ
கருத்தாய்நாற்று நடுவோமையா – ஏலங்கிடி லேலோ
கைகாலெல்லாம் சுருங்கிப் போச்சு – ஏலங்கிடி லேலோ
கஞ்சி குடிக்க நேரமாச்சு – ஏலங்கிடி லேலோ
முழங்கால்வலி எடுக்க எடுக்க – ஏலங்கிடி லேலோ
மூணுகுழி முடித்தோமையா – ஏலங்கிடி லேலோ
முட்டியோட முட்டி ஒட்டி – ஏலங்கிடி லேலோ
முகக்களையும் மங்கிப் போச்சு – ஏலங்கிடி லேலோ
கையிலொரு பணமும் வாங்கி – ஏலங்கிடி லேலோ
கடைக்குப் போறாள் காளியம்மா – ஏலங்கிடி லேலோ
முக்குறுணிச் சோளம் வேணும் – ஏலங்கிடி லேலோ
மொளகாய் வற்றல் கூடவேணும் – ஏலங்கிடி லேலோ
வம்பாடு பட்டதுக்கு – ஏலங்கிடி லேலோ
வறுத்தபயறுங் கூட வேணும் – ஏலங்கிடி லேலோ

**குறிப்பு** : ஏலங்கடி லேலோ– பெண்களை முன்னிலைப்படுத்திச் சொல்கின்ற மகடூஉ முன்னிலைச் சொல்.

## 2. தாலாட்டு

ஆராரோ ஆராரோ – கண்ணே நீ
ஆரிரரோ ஆராரோ
கண்ணே நவமணியே- கண்ணே நீ
கானலிலே பிறந்தாயோ?
என்னநான் சொல்வேனோ – கண்ணே நீ
இந்திரனோ சொல்லிவிடு.
கொட்டி வைத்த முத்தே – கண்ணே நீ
குவித்து வைத்த ரத்தினமே
கட்டிப் பசும்பொன்னே – கண்ணே நீ
கட்டி முத்தம் கொடுப்பாயோ?

சிரியம்மா சிரிச்சிரு – கண்ணே நீ
சித்திரபூந் தொட்டிலிலே

கரும்பு ரசமே – கண்ணே நீ
கசக்காத கல் கண்டே
ஆராரோ ஆராரோ – கண்ணே நீ
ஆறுமுகன் பிறந்தானோ?
மாத்துயர்ந்த பொன்னே – கண்ணே நீ
மண்டலத்து ராசாவோ?
பூத்த புதுப்பூவே – கண்ணே உன்
பொக்கிசத்தைப் பார்த்தாயோ?

மானே மருக்கொழுந்தே – கண்ணே நீ
மலர்விரித்த மல்லிகைப்பூ
காட்டுக் குயிலே – கண்ணே நீ
கண்டெடுத்த பாட்டுக்குயிலோ?
புள்ளைக் கலி தீர்க்கவந்த – கண்ணே என்
பொன்மானே – தூங்கம்மா
மாயன் மகளுக்குக் – கண்ணே நீ
மாப்பிள்ளையாய் வந்தவனோ?
தாய் சொல்லைத் தட்டாதே – கண்ணே நீ
தகப்பன் சொல்லைத் தவறாதே

சீதைக்கு அதிபதியோ – கண்ணே நீ
சிலையேந்தும் ரகுபதியோ?
ஒரு மாங்கனிக்கு – கண்ணே நீ
உலகமெல்லாம் சுற்றினையோ?
பெருமான் மருமகனோ – கண்ணே நீ
பெண்ரதிக்கு மாப்பிள்ளையோ?
கருப்புச் சிலையானோ – கண்ணே நீ
கன்னிவள்ளி நாயகனோ?
பரமசிவ னைஅடித்த – கண்ணே நீ
பாண்டியன் நீதானோ ?

ஆரடித்து நீ அழுதாய் – கண்ணே நீ
அழுதகண்ணீர் வடிகிறதே !
பேரைநீ சொல்லிவிடு – கண்ணே அவனைப்
பெருவிலங்கு போட்டிடுவேன்
வாடாத பூவே – கண்ணே நீ

வானத்திலே – தாராவோ?

தேடாத திரவியமே – கண்ணே நீ

தெவிட்டாத தெளிதேனோ?

கேட்டதெல்லாம் நான் தருவேன் – கண்ணே நீ

கெஞ்சாமே கொஞ்சுவாயே !

வட்டக் கலசத்திலே – கண்ணே நீ

வாய்நிரம்பப் பால்குடிச்சி

வாகனத் தொட்டிலிலே – கண்ணே நீ

வச்சிரம்போல் தூங்கிடம்மா.

பாடல் தொகுப்பு : திரு.பர்ஸி மாக்வீன், ஐ.சி.எஸ்.,
ஆதாரம் : மலை அருவி
பதிப்பாசிரியர் : கி.வா. ஜகந்நாதன்
சரஸ்வதி மஹால் நூலக வெளியீடு: 77
மார்ச் 2001

## கவிஞர் குறிப்புகள்

### பாரதியார் (1882 – 1921)

பெற்றோர்:சின்னச்சாமி–இலக்குமி அம்மையார் பிறந்தஊர்:திருநெல்வேலி மாவட்டம், எட்டையபுரம் பிறந்தநாள்:11.12.1882, இயற்பெயர்: சுப்பிரமணியம் சிறப்பு: அவரது பதினோராவது வயதில் பாரதி என்ற பட்டம் பெற்றார். பணி : இந்தியா, சக்கரவர்த்தினி இதழ்களுக்கு ஆசிரியர் சுதேசமித்திரன் இதழுக்கும் உதவியாசிரியர். புனை பெயர் : ஷெல்லிதாசன் சிறப்புப்பெயர்: தேசியகவி, மகாகவி, விடுதலைக்கவி இலக்கியப் படைப்பு:முப்பெரும் காவியங்கள் பாஞ்சாலிசபதம், கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, முதல் கவிதைநூல்:ஸ்வதேசகீதங்கள் (1908) அடுத்த நூல் : ஜன்மபூமி (1909) பிறபடைப்புகள்:சுயசரிதை, பாரதி அறுபத்தாறு, புதிய ஆத்திசூடி, முரசு, பாப்பாப்பாட்டு மறைவு : 19.9.1921-இல் தமது 39ஆம் வயதில் மறைந்தார். ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் பல வீறு கொண்ட பாடல்களைத் தந்தவர். தமிழில் முதன்முதலில் வசனகவிதை எழுதியவர். புதுக்கவிதையின் முன்னோடி. தேசபக்தி, சமய விடுதலை, நாட்டு விடுதலை, உலக தேசியம், தமிழ் விடுதலை, பெண் விடுதலை, சாதி விடுதலை போன்ற சீர்திருத்தக் கருத்துக்களில் புரட்சி, எளிமை, இனிமை, தெளிவு கொண்ட மகாகவிஞர்.

### பாரதிதாசன் (1891 – 1964)

இயற்பெயர்: கனக சுப்புரத்தினம், பெற்றோர் : கனகசபை - இலக்குமியம்மாள், பிறந்தஊர் : புதுவை,பிறந்தநாள் : 29.04.1891 சிறப்புப்பெயர்: புரட்சிக்கவிஞர், புதுவைக்குயில், பாவேந்தர். பணி: முல்லை, குயில் ஆகிய இதழ்களின் ஆசிரியர், இலக்கியப்படைப்பு: புரட்சிக்கவி, எதிர்பாராதமுத்தம்,குடும்பவிளக்கு, அழகின்சிரிப்பு, தமிழச்சியின் கத்தி,நாடகங்கள் : நல்ல தீர்ப்பு, படித்த பெண், பிசிராந்தையார் (சாகித்ய அகடாமி விருது பெற்றது) காப்பியங்கள்: மணிமேகலை வெண்பா, கண்ணகி புரட்சிக்காப்பியம்சமத்துவம், சமதர்மம் இவரது கண்கள். தமிழ், தமிழன், சாதி ஒழிப்பு, கடவுள் கொள்கை, ஒற்றுமை ஒருமைப்பாடு போன்ற கருத்துக்களில் புரட்சியைத் தந்தவர்.

### கவிமணி(1876 – 1954)

இயற்பெயர் : தேசிகவிநாயகம் பிறந்தஊர் : கன்னியாகுமரி மாவட்டம் பிறந்த ஆண்டு 1876

பெற்றோர்: சிவதாணுப்பிள்ளை – ஆதிலெட்சுமி அம்மாள்,சிறப்பு : தமிழ், மலையாளம், ஆங்கிலம் - மும்மொழிப் புலமை,படைப்புகள்: முதல் கவிதை – அழகம்மை ஆசிரிய விருத்தம்,பிறபடைப்புகள்: மருமக்கள் வழி மான்மியம்,மலரும் மாலையும், தேவியின் கீர்த்தனைகள், காந்தளூர்ச்சாலை, ஆசியஜோதி (எட்வின் ஆர்னால்ட் எழுதிய Light of Asiaஎன்ற ஆங்கிலக் கவிதைநூலைத் தழுவி எழுதப்பட்டது).உமர்கய்யாம் பாடல்கள் மொழிபெயர்ப்பு நூலாகும். குழந்தைக் கவிதைகள் என்ற புதிய இலக்கிய வகைக்கு வித்திட்டவர். எளிய சொற்கள், உயர்ந்த கருத்து விழுமிய ஓசை இவை கவிமணியின் கவிதைகளின் தனித்தன்மைகளாகும்.

## நாமக்கல் கவிஞர் (1888 - 1972) :

இயற்பெயர்: வே ராமலிங்கம்பிள்ளை, வட்ட அலுவலக ஊழியர், சிறந்த ஓவியர், தொடக்கப்பள்ளி ஆசிரியர், சமயப் பொதுநோக்குடையவர். முதலில் தெருக்கூத்து, பொம்மலாட்டம், நாடகம், போன்றவற்றிற்குப் பாடல்கள் எழுதியவர். வங்கப் பிரிவினையும், அரவிந்தர், திலகர், காந்தி இவர்களின் விடுதலைப் பேச்சுகளும், செயல்களும் உரமூட்டின. காந்தியக் கொள்கைகளை ஏற்று காந்தியக் கவிஞரானார். தமிழனென்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா என்ற பாடல் வரி புகழ்பெற்றதாகும்.இவரது மலைக்கள்ளன் என்ற புதினம் 6 மொழிகளில் திரைப்படம் ஆகியது. இந்திய அரசின் வெள்ளிப்பதக்கம் பெற்ற முதல் தமிழ்ப்படமாகும். அவனும் அவளும், இலக்கிய இன்பம், தமிழின் இதயம், சங்கொலி, கவிதாஞ்சலி, இசைத்தமிழ் போன்றன இவரது சிறந்த படைப்புகளாகும். கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது என்ற பாடல் காந்தியடிகளின் அறப்போராட்டங்களை எடுத்தியம்புவது. அரசவைக் கவிஞராக இருந்தவர் (1949). பத்மபூசன் விருது பெற்றவர் 17 உரைநடை நூல்கள், 7 புதினங்கள், 1 கதைப் பாடல், 2 நாடகம், 1 மொழி பெயர்ப்பு நூல்களையும் தமிழுக்குத் தந்தவர். இவரது பாடல்களை'நாமக்கல் கவிஞர் பாடல்கள்' எனும் நூலில் காணலாம்.

## பெருஞ்சித்திரனார் (1933–1995)

இயற்பெயர்: துரைமாணிக்கம், சேலம் மாவட்டம் சமுத்திரம் என்ற ஊரில் பிறந்தவர். தேவநேயப் பாவணரின் தலை மாணாக்கர். தனித்தமிழ் இயக்கம், தனித்தமிழ்நாடு எனும் கொள்கை உடையவர். சாதி, மதம், மக்களுக்கு நஞ்சு என்ற கருத்து உடையவர். தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களின் ஆசிரியர். இவரது படைப்புகள் : கவிதை மரபு பிறழாது, நூறாசிரியம், கொய்யாக்கனி, எண்சுவை எண்பது, அறுபருவ திருக்கூத்து, கனிச்சாறு,சாதிஒழிப்பு, மகபுகுவஞ்சி என்பனவாகும். இவர் பாவலரேறு என்ற சிறப்புப்பட்டம் பெற்றவர்.

## கண்ணதாசன் (1927–1981)

இயற்பெயர்: முத்தையா, பிறந்தஊர் : சிவகங்கை மாவட்டம் சிறுகூடல்பட்டி,சிறப்பு பெயர் : கவியரசு புனைபெயர்கள் : காரைமுத்துப் புலவர், வணங்காமுடி, பார்வதிநாதன், தமிழ் மன்னன், துப்பாக்கி, ஆடியபாதம், சிறப்பு : தமிழக அரசின் அரசவைக் கவிஞராக இருந்தார். பணி: சண்டமாருதம், தென்றல், கண்ணதாசன், முல்லை போன்ற பல இதழ்களில் ஆசிரியராக இருந்தார். படைப்புகள்: நாவல் : சேரமான் காதலி,(சாகித்ய அகாடமி விருது பெற்றது)ஆட்டனத்திஆதிமந்தி, தைப்பாவை, மாங்கனி (குறுங்காவியங்கள்) கண்ணதாசன் கவிதைகள் (7 தொகுதிகள்) அர்த்தமுள்ள இந்துமதம் (10 தொகுதிகள்) ஏசுகாவியம், சிவகங்கைச் சீமை, பாரிமலைக்கொடி, மலைவாசம், அனார்கலி உட்பட 60 நூல்கள் எழுதியுள்ளார். 1948 முதல் ஏறத்தாழ 30 ஆண்டுகள் திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதியுள்ளார். முதல்திரையிசைப்பாடல் 'கலங்காதிரு மனமே...' (1948) கடைசிப் பாடல் 'கண்ணே

கலைமானே...' (1981) எனும் பாடல்கள் ஆகும். இவரது ஆயிரக்கணக்கான திரையிசைப் பாடல்கள் மக்கள் மனதில் நிலையாக நிற்பவை.

## மு. மேத்தா

சென்னை மாநிலக் கல்லூரியின் மேனாள் தமிழ்ப் பேராசிரியர் வானம்பாடி இயக்கத்தைச் சேர்ந்தவர். சமுதாயம், அதன் சிக்கல்கள்தான் இவரின் பாடுபொருள். உவமை, உருவகம், கற்பனை, சொல்லாட்சி, கலைநயம் போன்றன இவரது தனித்துவமாகும். ஆற்றியபணி : தமிழகக் கவிஞர் பேரவையின் தலைவர் படைப்புகள் : கண்ணீர்ப் பூக்கள், நாயகம் ஒரு காவியம், இதயத்தின் நாற்காலி, நந்தவன நாட்கள், காத்திருந்த காற்று, மனச்சிறகு, அவர்கள் வருகிறார்கள், முகத்துக்கு முகம், ஊர்வலம், திருவிழாவில் ஒரு தெருப்பாடகன், ஒரு வானம் இரு சிறகு, காத்திருந்த காற்று,சோழ நிலா.

பாவேந்தர் விருது மற்றும் ஆகாசத்துக்கு அடுத்த வீடு என்னும் கவிதைத்தொகுப்பிற்கு சாகித்ய அகாடமி விருது பெற்றவர்.

## சிற்பி

இயற்பெயர் : பாலசுப்பிரமணியன், பொள்ளாச்சி என்.ஜி.எம் கல்லூரியின் மேனாள் தமிழ்ப்பேராசிரியர். வானம்பாடிக் கவிஞர், படிமக்கவிதைகளைப் படைப்பதில் வல்லவர். பொதுவுடைமைச் சிந்தனை கொண்ட புதுக்கவிஞர். இவரது படைப்புகள் நிலவுப்பூ, சூரிய நிழல், சிரித்த முத்துகள், ஒளிப்பறவை, புன்னகை பூக்கும் பூனைகள், இறகு, ஒரு கிராமத்து நதி (சாகித்ய அகடாமி விருது பெற்றது) போன்றனவாகும்.

## வைரமுத்து

தேனி மாவட்டம், மெட்டூர் இவரது ஊராகும். இவரது முதல் கவிதைத் தொகுப்பு வைகறை மேகங்கள். தமிழ்நாடு சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையத்தில் மொழி பெயர்ப்பாளராகப் பணி செய்தவர். பின்னர் முழுநேரத் திரைப்படப் பாடலாசிரியர். ரத்ததானம், திருத்தி எழுதிய தீர்ப்புகள், இன்னொரு தேசிய கீதம், கொடிமரத்தின் வேர்கள், இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல போன்ற கவிதை நூல்கள் சிறப்பானவையாகும்.தண்ணீர் தேசம், கள்ளிக்காட்டு இதிகாசம் (சாகித்ய அகடாமி விருது பெற்றது), கருவாச்சிக் காவியம், மூன்றாம் உலகப்போர் போன்றன புதினங்களாகும்.

விருதுகள் : 6 முறை தேசிய விருது, சென்னை தமிழ் வளர்ச்சிக்கழகம் வழங்கிய கவியரசர் விருது (1986), கலைமாமணி விருது(1990), பத்மஸ்ரீ விருது (2003),கௌரவ டாக்டர் பட்டம் (2008) மற்றும் பாரதியார் இலக்கிய விருது பெற்ற உயர்ந்த கவிஞர்

## ஈரோடு தமிழன்பன் :

இயற்பெயர் : ந.ஜெகதீசன், சென்னை புதுக்கல்லூரியின் மேனாள் தமிழ்ப் பேராசிரியர் பாட்டரங்கம் பல கண்ட பாவலர். சொல்லாட்சியிலும், படிமக்குறியீட்டிலும் தனித்திறன் பெற்றவர். பழமையும், புதுமையும் பகையின்றி இவரது கவிதைகளில் கொலுவீற்றிருக்கும். உருவகம், கருத்து, முரண், நடைநயம் போன்றன இவரது கவிதைகளின் சிறப்புகளாகும். விடிவெள்ளி, தோணி வருகிறது, சூரியப்பிறைகள் (ஹைக்கூ) வணக்கம் வள்ளுவ போன்ற 45க்கும் மேற்பட்ட நூல்களைத் தந்தவர். தமிழ் ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ ஆகிய புதிய வடிவங்களில் புகழ்பெற்றவர்.

## நா. காமராசன :

மதுரை மாவட்டம், உத்தமபாளையம், ஊட்டி அரசுக் கல்லூரி மேனாள் தமிழ்ப் பேராசிரியர். பகுத்தறிவும், சோசலிசமும் இவரது இருகண்கள். அழகிய உருவகங்களும், படிமங்களும் இவரது கவிதைகளின் தனிச்சிறப்பு. தமிழ்ப் புதுக்கவிதைக் கவிஞர்களின் ‘கவியரசு’ எனப் போற்றப்படுபவர். கறுப்பு மலர்கள், சூரியகாந்தி, ஆப்பிள் கனவு, பொம்மைப்பாடகி, சஹாராவை தாண்டாத ஒட்டகங்கள், மலையும் ஜீவநதிகளும் இவரது சிறந்த படைப்புகளாகும்.

**கல்யாண்ஜி :**

இயற்பெயர்:கல்யாணசுந்தரம். மனித மனதின் சோகங்களை மெல்லிய குரலில் எழுதுபவர். நிகழ்கால வாழ்க்கைச் சூழலைக் கவிதையில் படம் பிடிப்பவர். முன்பின், கல்யாண்ஜியின் கவிதைகள் அன்னியமற்ற நதி, புலரி என்பன இவரது சிறந்த படைப்புகளாகும்.

**தமிழச்சி தங்கப்பாண்டியன் :**

இயற்பெயர்:சுமதி, ஆங்கிலமொழிப் பேராசிரியர், பாலியல் வன்கொடுமைகளைக் கண்டிக்கும் பெண்ணியக் கவிஞர். மஞ்சணத்தி, எஞ்சோட்டுப் பெண், வனப்பேச்சி, அருகன் போன்றவை இவரது கவிதைத் தொகுப்புகளாகும். பாம்படம், சொல் தொடும் தூரம் உரைநடை நூல்களாகும்.

**பா. விஜய் :**

இவரது ஊர் கும்பகோணத்தின் அருகில் உள்ள உட்கோட்டை கிராமமாகும். பஞ்சாலைத் தொழிலாளர். தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றவர். ஞானப்பழம் நீ என்ற திரைப்படத்தில் அறிமுகமாகி இதுவரை 600 திரைப்படங்களில் 2000க்கும் மேற்பட்ட பாடல்களை எழுதியுள்ளார். 2004ஆம் ஆண்டு “ஒவ்வொரு பூக்களுமே” (ஆட்டோகிராப்) என்ற பாடலுக்குத் தேசிய விருது பெற்றவர். கலைஞர் மு. கருணாநிதியால் ‘வித்தகக் கவிஞர்’ என்ற பாராட்டைப் பெற்றவர். கவிஞர் வாலியால் தனது திரையுலக வாரிசு என அறிவிக்கப்பட்டவர். நம்பிக்கையுடன், வானவில் பூங்கா போன்றன இவரது சிறந்த கவிதைத் தொகுப்புகளாகும்.

**உமாஹரிஹரன் :**

நெல்லை மாவட்டம் சுத்தமல்லி இவரது சொந்தஊர். இயற்பெயர் வ.ஹரிஹரன். உமா ஹரிஹரன் என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதி வருபவர். மேலநீலிதநல்லூர் ப.மு.தேவர் கல்லூரியில் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் தொ.மு.சி.ரகுநாதனின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்து நூலாக்கியவர். திறனாய்வுப் பொருளில் 8 உரைநடை நூல்களைத் தந்துள்ளவர்.

## முதற்பருவம் - இலக்கணப்பகுதி

**I. மரபிலக்கணம் :**

1. எழுத்து பற்றிய விளக்கம்
2. முதலெழுத்து, சார்பெழுத்துக்கள்

3. சுட்டெழுத்துக்கள், வினாவெழுத்துக்கள்
4. மொழி முதல் எழுத்துக்கள், மொழி இறுதி எழுத்துக்கள் (தற்காலமொழி நிலையை ஒப்பிடுக)
5. கிரந்த எழுத்துக்கள்
6. வல்லினம் மிகும், மிகா இடங்கள்

## II. ஒலிப்பு மாறுபாடுகளும் பொருள் வேறுபாடுகளும்

1. ண, ன வேறுபாடுகள்
2. ர, ற வேறுபாடுகள்
3. ல,ள,ழ வேறுபாடுகள்

கருத்துப் பரிமாற்றத்திற்குத் துணை செய்யக்கூடியது மொழி. அது மக்களின் அன்றாட வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ளது. மாறிவரும் காலச்சூழ்நிலையில் மொழிகளில் காணப்படும் ஒலி மாறுபாடு பொருள் வேறுபாட்டினைத் தோற்றுவிக்கின்றது என்பதை உணராமலே வாழ்கின்ற நிலை காணப்படுகின்றது. தமிழ்மொழியில் ஒலி மாறுபாடு அறிந்து சரியான பொருளை அறிந்து கொள்ளுதல் இன்றியமையாதது.

### அ. ணகர,னகர வேறுபாடுகள் :

நுனிநா மேல் அண்ணத்தைப் பொருந்த ‘ணகரம்’ பிறக்கும். நுனி நா மேல்வாய்ப் பற்களில் பொருந்த ‘னகரம்’ பிறக்கும்.

1. அரன் - சிவபெருமான்
   அரண் - மதில்
2. அன்னம் - சோறு, பறவை
   அண்ணம் - மேல்வாய்
3. ஆனை - யானை
   ஆணை - கட்டளை
4. உன்னுதல் - நினைத்தல்
   உண்ணுதல் - சாப்பிடுதல்
5. ஊன் - இறைச்சி
   ஊண் - உணவு
6. கன்னன் - கர்ணன்
   கண்ணன் - கிருட்டிணன்
7. கனம் - பளு
   கணம் - கூட்டம்
8. கனி - பழம்
   கணி - சோதிடம்
9. பானம் - பருகும் பொருள்
   பாணம் - அம்பு
10. புனை - அலங்காரம்
    புணை - தெப்பம்
11. மன் - அரசன்
    மண் - நிலம்
12. மனம் - உள்ளம்
    மணம் - வாசனை
13. மான் - விலங்கினம்
    மாண் - மாட்சிமை
14. வன்மை - வலிமை
    வண்மை - கொடை
15. தினை - தானிய வகை
    திணை - ஒழுக்கம்
16. தனி - துணையின்மை
    தணி - அமைதி கொள்

### ஆ. ரகர, றகர வேறுபாடுகள்

நா நுனியானது மேல் அண்ணத்தை வருடும் போது 'ரகரம்' பிறக்கும். நா நுனியானது மேல்வாயை நன்றாகப் பொருத்தி லேசாக அதிரும் போது 'றகரம்' பிறக்கும்.

1. அரம் - வாள்
   அறம் - தருமம்
2. அரி - வெட்டு
   அறி - உணர்தல்
3. அருகு - பக்கம்
   அறுகு - அறுகம்புல்
4. அரை - பாதி
   அறை - வாழுமிடம்
5. இரத்தல் - கையேந்துதல்
   இறத்தல் - மரணமடைதல்
6. இரை - உணவு
   இறை - கடவுள்
7. உரவு - வலிமை
   உறவு - சொந்தம்
8. உரு - தோற்றம் (வடிவம்)
   உறு - மிகுதி
9. எரி - தணல் (நெருப்பு)
   எறி - எறிதல் (வீசுதல்)
10. ஏரி - நீர்நிலை
    ஏறி - ஏறுதல்
11. ஒருத்தல் - களிறு (யானை)
    ஒறுத்தல் - தண்டித்தல்
12. கரி - யானை
    கறி - காய்கறி உணவு
13. கரை - ஓரம்,ஆற்றங்கரை
    கறை - அழுக்கு, குற்றம்
14. கீரி - கீரிப்பிள்ளை
    கீறி - பிளவுபடுதல்
15. குரங்கு - வானரம்
    குறங்கு - தொடை
16. குரை - குரைத்தல் (ஒலி)
    குறை - குறைபாடு (ஊனம்)
17. சீரிய - பெருமை பெற்ற
    சீறிய - கோபம் கொண்ட
18. செரு - போர்
    செறு - வயல்
19. துரவு - கிணறு
    துறவு - சந்நியாசம்
20. பொருப்பு - மலை
    பொறுப்பு - கடமை
21. விரகு - தந்திரம்
    விறகு - மரக்கட்டை
22. மாரி - மழை
    மாறி - மாறி வருதல்
23. நரை - வெண்மை,வெண்மலர்
    நறை - தேன்
24. நெரி - நெருக்கு
    நெறி - பாதை
25. மரை - மான், தாமரை
    மறை - வேதம்

## இ. லகர, ழகர, ளகர வேறுபாடுகள்

மேல் வாய்ப்பல்லின் அடியை நுனி நாவின் ஓரமானது தடித்து மென்மையாகப் பொருந்தும் போது 'லகரம்' பிறக்கும்

நா நுனியாவது மேல் நோக்கி வளைந்து உள்நாவின் அருகில் அன்னத்தை வருடும் போது 'ழகரம்' பிறக்கும்.

நா நுனியாவது சற்று மேல் நோக்கி வளைந்து மேல்வாய் அன்னத்தின் நடுப்பகுதியைத் தடவும் போது 'ளகரம்' பிறக்கும்.

1. அலகு - பறவைகளின் மூக்கு
   அளகு -பெண் மயில்
   அழகு -எழில்
2. அலம் - கலப்பை
   அளம் -உப்பளம்
3. அலி -ஆணும்,பெண்ணும் அற்றது
   அளி -கொடு
   அழி -இல்லாமல் செய்தல்
4. அலை -கடல் அலை
   அளை -புற்று
5. ஆல் -ஆலமரம்
   ஆள் -ஆட்சி செய்தல்
6. ஆலி -மழைத்துளி
   ஆளி -ஒரு விலங்கு
   ஆழி -கடல்
7. உளி -கரவி
   உழி -இடம்

8. உலை -உலைக்களம்
உளை -பிடரிமயிர்
உழை -மான்

9. உல்கு -சுங்கம்
உள்கு -நினை

10.எல் -பொழுது (பகல்)
எள் -தானியம்

11.ஒலி -சப்தம்
ஒளி -வெளிச்சம்
ஒழி -விலக்கு,அறவே நீக்குதல்
12.கலி -ஓசை
களி -மகிழ்ச்சி
கழி -உப்பங்கழி
13.கலை -ஆண் மான்
களை -களைதல்
கழை -மூங்கில்

14.கிளவி -சொல்
கிழவி -வயதான பெண்

15.கூலி -சம்பளம்
கூளி - பேய்

16.சூல் - கருப்பம்
சூள் -சப்தம்
சூழ் -சுற்று

17.தலை -உடலின் ஓர் உறுப்பு
தளை -செய்யுள் உறுப்பு
தழை -இலை

18.தால் -நாக்கு
தாள் -முயற்சி
தாழ் -பணிவு, தாழ்ப்பாள்

19.நல்லார் -நண்பர்
நள்ளார் -பகைவர்

20.பல்லி -ஓர் உயிரினம்
பள்ளி -பள்ளிக்கூடம்

21.பசலை - நிற வேறுபாடு (பெண்)
பசளை - ஒருவகைக்கொடி, கீரை

22.தோல் -சருமம்
தோள் -புயம்

23.துலை -தராசு, தூரம்
துளை -துவாரம், மூங்கில்

ஒலி மாறுபாட்டால் பொருள் வேறுபடும் சொற்களை இனம் காண பயிற்சி அளித்திடல் வேண்டும்.

## இலக்கிய வரலாறு

1. புதுக்கவிதை– தோற்றமும் வளர்ச்சியும்
2. சிறுகதை – தோற்றமும் வளர்ச்சியும்
3. புதினம் – தோற்றமும் வளர்ச்சியும்
4. நாடகம் – தோற்றமும் வளர்ச்சியும்
5. தகவல் தொடர்புச் சாதனங்களும், தமிழ் வளர்ச்சியும்

* * * * *